கிறீஸ்டடெல்ஃபியன் ஓய்வுநாள் பாடசாலை

ஆண்டு 3

# சிறுவர் கைவேலைப் புத்தகம்

பாடம் - 1

# இஸ்ரவேலர் ஓர் ராஜாவைக் கேட்டது

**(1.சாமுவேல் 8)**




மனப்பாட வசனம் :

"கர்த்தர் சாமுவேலை நோக்கி : ஜனங்கள்.... சொல்லைக்கேள். அவர்கள் உன்னைத் தள்ளவில்லை. நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்." (1.சாமுவேல் 8:7)

பாடம் - 2

# சவுல் தெரிந்தெடுக்கப்பட்ட அரசன்

**(1.சாமுவேல் 9:1-10,15-27; 10:1,7-26; 11:15)**



மனப்பாட வசனம் :

"பின்பு தானியேல் சொன்னது: தேவனுடைய நாமத்திற்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது. அவர் காலங்களையும், சமயங்களையும் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர், ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்." (தானியேல் 2:20-21)

பாடம் - 3

# யோனத்தானின் வீரம்

( 1. சாமுவேல் 13:1-7 & 19-23; 14:1-23 )



மனப்பாட வசனம் :

"ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார். அனேகம் பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும் ரட்சிக்க கர்த்தருக்குத் தடையில்லை."
(1. சாமுவேல் 14:6)

பாடம் - 4

# தாவீது தேவனால் அபிஷேகம் பெற்றவன்

(1. சாமுவேல் 15:35; 16)



மனப்பாட வசனம் :

"கர்த்தர் மனுஷர் பார்ப்பதுபோல் பாரார், மனிதன் வெளிதோற்றத்தைக் காண்பான்.
கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்."
(1.சாமுவேல் 16:7)

பாடம் - 5

# தாவீது மற்றும் கோலியாத்

**( 1.சாமுவேல் 17 )**

**தா**வீது, கோலியாத்தோடு யுத்தம் செய்வேன் என்றான்




மனப்பாட வசனம் :

“அதற்கு தாவீது பெலிஸ்தனை நோக்கி நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்.” (1. சாமுவேல் 17:45)

பாடம் - 6

# தாவீது மற்றும் யோனத்தான்

(1.சாமுவேல் 18:1-4; 20)



மனப்பாட வசனம் :

“யோனத்தானுடைய ஆத்துமா, தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது. யோனத்தான் அவனைத் தன் உயிரைப் போலச் சிநேகித்தான்.” (1. சாமுவேல் 18:1)

பாடம் - 7

# வினா-விடை வாரம் : பாடம் 1-6 வரை

(1. சாமுவேல் 8-20)

இக்கட்டான தேடுதல் - விளையாட்டு சக்கரம்



பாடம் - 8

# தாவீது சவுலின் ஜீவனைத் தப்பவிடுதல்

(1.சாமுவேல் 24; 26)



மனப்பாட வசனம் :

"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோமர் 12:21)

பாடம் - 9

# சவுல் மற்றும் யோனத்தானின் மரணம்

(1.சாமுவேல் 31:1-6; 2.சாமுவேல் 1)



மனப்பாட வசனம் :

"சத்துருக்களைச் சிநேகியுங்கள். துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்".

(மத்தேயு 5:44)

பாடம் - 10

# தாவீது அரசனாகுதல்; கர்த்தருடைய பெட்டி எருசலேமுக்கு வருதல்

(2.சாமுவேல் 5:1-12; 6)



மனப்பாட வசனம் :

"அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்." (சங்கீதம் 119:2)

பாடம் - 11

# தாவீதுக்குக் கர்த்தரின் வாக்குத்தத்தம்; தேவாலயத்துக்கு ஆயத்தம்

(1 நாளாகமம் 17)

தாவீது அரசன் கேதுருமர வீட்டில் வாசமாயிருந்தான்.

புள்ளிகளைச் சேர்த்து தாவீதுக்கு ஒரு வீடு கட்டுங்கள்




கர்த்தருடைய பெட்டி கூடாரத்தில் இருந்தது, தாவீது கர்த்தருக்கு ஓர் ஆலயம் கட்ட எத்தனித்தான்

படத்தை முடியுங்கள்



மனப்பாட வசனம் :

"இப்போது கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார்."
(1.நாளாகமம் 17:10)

பாடம் - 12

# தாவீது ஓர் வாக்கைக் காத்தல்

(2.சாமுவேல் 4 & 9)



மனப்பாட வசனம் :

"உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும். உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணிச் சொன்ன உற்சாக பலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக."
(உபாகமம் 23:23)

பாடம் - 13

# வினா - விடை வாரம்: பாடங்கள் 9-12



# தாவீதின் மரணம்; சாலொமோன் ஞானத்தைக் கேட்டல்

**( 1.நாளாகமம் 28:1-10,20; 29; 2.நாளாகமம் 1:1-12; 1.ராஜாக்கள் 3:16-28 )**



மனப்பாட வசனம் :

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவராகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்". (யாக்கோபு 1:5)

பாடம் - 15

# தேவாலயம் கட்டுதல்

( 2.நாளாகமம் 2; 3:1-2; 5; 6:40-42; 7 )



மனப்பாட வசனம் :

"அவர்கள் கர்த்தருடைய மகிமையைக் கண்டு, பணிந்து கொண்டு, கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி அவரைத் துதித்தார்கள்."

(2.நாளாகமம் 7:3)

பாடம் - 16

# ஷீபாராணி சாலொமோனைச் சந்தித்தல்

(1.ராஜாக்கள் 10:1-24)

ஷீபாராணி சாலொமோனைச் சந்திக்கும்படி போனாள்.

பாதையைத் தேட உதவுங்கள்



சேருமிடம்

படத்தைப் பூர்த்தி செய்யவும்



அவள் ஒட்டகங்களோடு மிகுந்த பரிவாரத்தையும், கந்தவர்க்கங்களையும் பொன் இரத்தினம் முதலியவற்றையும் கொண்டு வந்தாள்.



மனப்பாட வசனம் :

“திரளான ஐசுவரியத்தைப்பார்க்கிலும், நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது. பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம்.”

(நீதிமொழிகள் 22:1)

பாடம் - 17

# ராஜ்யம் பிரிதல்

**( 1. ராஜாக்கள் 11:1-13, 26-43, 12:1-24 )**

ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் அதனதன் வர்ணம் பூசவும்

△ சிவப்பு = யெரொபெயாம்

◯ நீலம் = ரொகொபெய்யாம்




"நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்தால், நீங்களும் உங்களை ஆளுகிற ராஜாவும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின் பற்றுகிற வர்களாயிருப்பீர்கள்."
(1. சாமுவேல் 12:14)

மனப்பாட வசனம் :

"நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்தால், நீங்களும் உங்களை ஆளுகிற ராஜாவும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின் பற்றுகிற வர்களாயிருப்பீர்கள்."
(1. சாமுவேல் 12:14)

பாடம் - 18

# யோனாவும் பெரிய மீனும்

(யோனா 1-4)

யோனா கடலில் மரிப்பதைத் தேவன் விரும்பவில்லை. எனவே யோனாவைப் பத்திரமாகக் காக்கும்படி அவர் ஒன்றை அனுப்பினார்.

● புள்ளியுள்ள கட்டத்தில் வர்ணம் பூசவும்



**மனப்பாட வசனம் :**

"ஆண்டவரே, நீர் நல்லவரும் மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்த வருமாயிருக்கிறீர்." (சங்கீதம் 86:5)

பாடம் - 19

# வினா - விடை வாரம்

பாடம் - 20

# ஏசாயா, இயேசுவை முன்குறித்த தீர்க்கதரிசி

(ஏசாயா 11:1-9; 35:5-6; 42:1-7; 53)



மனப்பாட வசனம் :

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர். வல்லமையுள்ள தேவன். நித்திய பிதா, சமாதானப் பிரபு எனப்படும்."

(ஏசாயா 9:6)

பாடம் - 21

# இயேசுவின் பிறப்பு

**( லூக்கா 1:26-38, 2:1-38, மத்தேயு 1:18-25 )**

மரியாளும் யோசேப்பும் பெத்லகேம் ஊருக்குப் போகவேண்டும். அங்கு இயேசு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார்.

**இந்தப் படத்திலுள்ள 11 பிராணிகளைக் கண்டுபிடியுங்கள்.**



மனப்பாட வசனம் :

"தேவதூதன் அவளுக்கு பிரதியுத்தரமாக பரிசுத்த, ஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (லூக்கா 1:35)

பாடம் - 22

# ஞானிகள் இயேசுவைச் சந்தித்தல்

( மத்தேயு 2:1-18 )

இயேசுவைக் காண கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் தங்கள் பொக்கிஷங்களைக் கொண்டு வந்தார்கள்.

| இயேசுவுக்கு தங்கள் பொக்கிஷங்களைக் கொண்டு வந்த ஞானிகளை வழி நடத்துங்கள் |
|---|



மனப்பாட வசனம் :

"அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்."

(மத்தேயு 2:10)

பாடம் - 23

# இயேசுவின் ஞானஸ்நானம்

( மத்தேயு 3:13-17 )



மனப்பாட வசனம் :

“அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.”

(மத்தேயு 3:17)

பாடம் - 24

# இயேசுவின் சோதனைகள்

(மத்தேயு 4:1-11)



மனப்பாட வசனம் :

"அவர் பிரதியுத்தரமாக, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று எழுதியிருக்கிறதே, என்றார்."

(மத்தேயு 4:4)

பாடம் - 25

# இயேசு தமது சீஷர்களைத் தெரிந்தெடுத்தல்

( மாற்கு 1:14-20; 2:13-17; 3-13-19 )




**மனப்பாட வசனம் :**

"இயேசு அவர்களை நோக்கி, என் பின்னே வாருங்கள். உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார். (மாற்கு 1:17)

பாடம் - 26

# இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்தல்

( மாற்கு 5:1-16,38-48; 6 )



மனப்பாட வசனம் :

"இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது"
(மத்தேயு 5:16)

பாடம் - **27**

# வினா விடை வாரம்

பாடம் - 28

# கானாவூர் கலியாணம்

(யோவான் 2:1-11)

இயேசு கலியாணத்திற்குச் சென்றார்.
திராட்சரசம் குறைவுப்பட்டது. இயேசு
தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினார்.

6 கற்ஜாடிகளைக் கண்டு பிடிக்கவும். 



மனப்பாட வசனம் :

"ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." (1.கொரிந்தியர் 10:31)

பாடம் - 30

# ஐந்து சிநேகிதர்கள்

(மாற்கு 2:1-13)

ஒர் திமிர்வாதக் காரன் இயேசுவால் சுகமடைய விரும்பினான். அங்கு ஜனக்கூட்டம் அதிகம் இருந்ததால் சிநேகிதர் அவனைக் கூரையின் வழியாக இயேசுவிடம் இறக்கினார்கள்.




மனப்பாட வசனம் :

"சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும். சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனும் உண்டு." (நீதிமொழிகள் 18:24)

பாடம் - 31

# நாயீன் ஊர் விதவை

**( லூக்கா 7:11-16 )**

இந்தப் பெண்
ஏன்
அழுகிறாள்
என்று
தெரியுமா ?





அவளுடைய ஒரே குமாரன்
இறந்துவிட்டான்.

---

நமது எல்லா வேதனைகளையும் உணருகிற இயேசு



அப்பொழுது யார்
நாயீன் என்ற
ஊருக்கு வந்தார் ?

---



இயேசு அவளுக்கு என்ன கொடுத்தார் ?



அவளுடைய ஒரே குமாரனை உயிருடன்
மீண்டும் கொடுத்தார்.

---



அப்படி
சம்பவித்தபோது
அவர்கள் என்ன
செய்தார்கள் ?

"உனக்கும் அப்படி சம்பவித்தால்
நீ அதை அறிந்திருப்பாய்"



**மனப்பாட வசனம் :**

"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" (மத்தேயு 15:4)

பாடம் - 32

# இயேசு மன்னிக்கிறார்

**( லூக்கா 7:36-50 )**

இயேசு மதத் தலைவன் ஒருவனின் வீட்டில் பந்தி இருந்தார். ஒரு பெண் நன்றி மிகுதியினால் தனது கண்ணீரை இயேசுவின் பாதத்தில் ஊற்றினாள். தனது தலைமுடியால் அவர் பாதத்தைத் துடைத்தப்பின் விலையுயர்ந்த தைலத்தைப் பூசினாள்.

கீழே உள்ளே இரண்டு படத்தின் 10 வேறுபாடுகளை வட்டமிடுக.





மனப்பாட வசனம் :

"நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன். என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்." (சங்கீதம் 32:5)

பாடம் - 33

# பெருங்காற்றை அடக்கியது

(மாற்கு 4:35-47)



சீற்றமடைந்த கடலில் அலையும் படகிலுள்ள சீஷர்களை வரைக.



அமைதலான கடலில் மிதக்கும் படகிலுள்ள சீஷர்களை வரைக.

# காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே

மனப்பாட வசனம் :

"இதோ, சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்."
(மத்தேயு 28:20)

பாடம் - 34

# காணாமற் போனதும் கண்டடைந்ததும்

(லூக்கா 15)




மனப்பாட வசனம் :

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1.யோவான் 1:9)

பாடம் - 35

# திராட்சைதோட்ட வேலைக்காரர்

(மத்தேயு 20:1-16)



ஒவ்வொரு கூலிக்காரனுக்கும் நூறு ரூபாய் நோட்டு வரைக.

நம்மிடம் உள்ளத்தில் திருப்தியாய் இருக்கும்படி தேவன் விரும்புகிறார். உன்னிடம் உள்ளவைகளில் உனக்கு விருப்பமான சிலவற்றை வரைக.

**மனப்பாட வசனம் :**

"பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்." (ரோமர் 6:23)

பாடம் - 36

# இயேசு எருசலேமுக்குள் பிரவேசித்தல்

(லூக்கா. 19:28-42)



மனப்பாட வசனம் :

"முன் நடப்பாரும் பின் நடப்பாருமாகிய திரளான ஜனங்கள் : தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்." (மத்தேயு 21:9)

பாடம் - 37

# தேவாலயத்தைச் சுத்திரிகரித்தல்

( மாற்கு 11:15-18 )




மனப்பாட வசனம் :

"கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது." (ஆபகூக் 2:20)

பாடம் - 38

# விதவையின் காணிக்கை

**( லூக்கா 21:1-4 )**



மனப்பாட வசனம் :

"இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள், என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 21:3)

பாடம் - 39

# பத்து கன்னிகைகள்

**( மத்தேயு 25:1-13 )**

**10** கன்னிகைகளிடம் எண்ணெயால் எரிகிற தீபங்கள் இருந்தன. அவர்கள் மணவாளனுக்கு எதிர்கொண்டு கலியாண விருந்துக்குப் போவதாக இருந்தனர்.

தீங்களின் ஜுவாலையை எரியச் செய்க



5 பெண்களின் தீபங்களில் எண்ணெய் இருக்கவில்லை. 5 தீபங்கள் மேல் X குறியிடுக.



5 பேர் மட்டும் விருந்துக்குள் சென்றனர்
மற்றவர்கள் பிந்திவிட்டனர்.

5 பேருக்கு ☺ 5 பேருக்கு ☹ குறியிடுக

மனப்பாட வசனம் :

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியா திருக்கிறபடியினால் விழித்திருங்கள்." (மத்தேயு 24:42)

பாடம் - **40**

# வினா-விடை வாரம்

| | |
|---|---|
| உவமை :<br>திராட்சை தோட்ட வேலைக்காரர் | உவமை :<br>பத்து கன்னிகைகள் |
| உவமை :<br>பரிசேயனும் ஆயக்காரனும் | உவமை :<br>காணாமற் போனதும், கண்டைந்ததும் |